**போக்குவரத்துத் துறை**

**அனுப்புநர்**

போக்குவரத்து ஆணையர்.
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–05,

**பெறுநர்**

திரு.T.A.ஜாஹீர் ஹுசைன்,
பொதுச் சயலாளர்,
உரிமை குரல்,ஓட்டுநர் தொழிற்சங்கம்,
பதிவு எண்: 532/KPM, எண்:56/48. பழைய
ஸ்டேட் பேங்க் காலனி ரோடு, மேற்கு தாம்பரம்,
சென்னை – 45.

**ந.க.எண்:23185/ஐ2/2022** **நாள்: 03.08.2023**

ஐயா,

**பொருள்** போக்குவரத்துத் துறை – Aggregator திட்டம் தமிழ் நாட்டில் அமல்படுத்த கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது – தொடர்பாக.

**பார்வை** திரு.T.A.ஜாஹீர் ஹுசைன்,பொதுச் சயலாளர், உரிமை குரல், ஓட்டுநர் தொழிற்சங்கம், பதிவு எண்: 532/KPM, எண்:56/48. பழைய ஸ்டேட் பேங்க் காலனி ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை – 45, என்பவரின் மனு நாள் 26.06.2023.

******

பார்வையில் காணும் கடிதத்தை த/செ காணவும். இதில் திரு.T.A.ஜாஹீர் ஹுசைன், பொதுச் சயலாளர், உரிமை குரல், ஓட்டுநர் தொழிற்சங்கம், சென்னை – 45, என்பவர் தமிழ் நாட்டில் செயலி மூலம் ஆட்டோ, கால் டாக்ஸி, சரக்கு வாகன தொழிலில் மாதம் 100 கோடி ரூபாய்க்கு மேல் வணிகம் செய்து வரும் ஓலா, ஊபர், போர்டர் போன்ற நிறுவனங்கள் மீது ஓட்டுனர்/தொழிலாளர் மற்றும் வாடிக்கையாளர் தரப்பிலிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

தற்போது மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி Aggregator ஒழுங்கு முறை திட்டம் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதை வரவேற்பதாகவும் ஆனால் அதே வேளையில் இந்த சட்டத்தை மத்திய அரசு வழிகாட்டியுள்ள சரத்துகளின் படி அப்படியே தமிழ் நாட்டில் அமல்படுத்தாமல் ஒட்டுநர் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் நிர்வாகிகளோடு போக்குவரத்து துறை அதிகாரிகள் கருத்துக்களை கேட்ட பின்பு தமிழ் நாட்டில் AGGREGATOR RULES AND REGULATION–ஐ தேவையான திருந்தங்களோடு அமல்படுத்த கோரியுள்ளார்.

தமிழ் நாடுக்கு பொருந்தக் கூடிய வகையில் Aggregator Guidelines, 2022 கருத்துரு தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலினையில் இருந்து வருகிறது. இது அரசாணையாக வெளிவரும் சமயம் பொது மக்கள் அனைவருக்கும் தங்களது தரப்பினை தெரிவிக்க சந்தரப்பம் வழங்கப்படும் என்ற விபரம் மனுதாராருக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஒ.ம்/–அ.சண்முக சுந்தரம்,
போக்குவரத்து ஆணையர்,
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–05.

//உத்தரவுப்படி//

3/8/23

இணைப் போக்குவரத்து ஆணையர்(வி),
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–05.

3/8/2023